சுருக்கம் – சென்னை–6, DPI வளாகத்தில் செயல்பட்டு வரும் "ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம்" என்பதை "தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது – அரசால் ஏற்கப்பட்டு ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (கே) துறை

அரசாணை (நிலை) எண். 212

நாள்: 11.11.2008
திருவள்ளுவர் ஆண்டு 2039,
ஐப்பசி 26

படிக்கப்பட்டது

(1) அரசு ஆணை (நிலை) எண்.10, பொது (பணிகள்–ஏ) துறை, நாள் 3.1.1964.
(2) பாண்டிச்சேரியில் வசிக்கும் தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தின் செயலாளரது கடிதம் நாள் 5.7.2006
(3) உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண்.30722/2006ல் தீர்ப்பு நாள் 5.9.2006
(4) அரசுக் கடித எண். 8926/கே/2008–1 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள் 21.2.2008
(5) சென்னை–6, DPI வளாகத்தில் இயங்கிவரும் தமிழ்நாடு ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளரது கடிதம் நாள் 27.2.2008
(6) அரசுக்கடித எண்.8926/கே/2008–3 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள் 3.3.2008
(7) பாண்டிச்சேரியில் வசிக்கும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் சங்கத்தின் கடிதம் நாள் 15.3.2008
(8) அரசுக் கடித எண்.8926/கே/2008-5, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள் 5.6.2008
(9) சென்னை–6, DPI வளாகத்தில் இயங்கிவரும் தமிழ்நாடு ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளரது கடிதம் நாள் 15.9.2008.

*****

ஆணை:–

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.10, பொது (பணிகள்–ஏ) துறை, நாள் 3.1.1964–ல் அரசு அங்கீகாரம் வழங்கப்பட்டு "ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம்" DPI வளாகம், சென்னை–6ல் செயல்பட்டு வருகிறது.

2. "பாண்டிச்சேரியில் வசிக்கும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் சங்கத்தினர்" என்ற அமைப்பில் உள்ளவர்கள் மேலே இரண்டில் படிக்கப்பட்ட தங்களது கடிதத்தில் சொல்லப்பட்ட காரணங்களின் அடிப்படையில், சென்னை–6, DPI வளாகத்தில் அமைந்துள்ள "ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கத்தின்" அங்கீகாரத்தை ரத்து செய்யவேண்டும் என்று அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர். இதன் தொடர்பாக, அவர்களால் உயர்நீதி மன்றத்தில் வழக்கு ரிட் மனு எண். 30722/2006 தொடரப்பட்டு அதன்மீது, 5.9.2006 நாளிட்ட ஆணையில், பாண்டிச்சேரியில் வசிக்கும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் சங்கத்தின் மேற்சொன்ன 5.7.2006 நாளிட்ட மனுவின் மீது ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கத்தினை கலந்து, தகுந்த ஆணை வெளியிடுமாறு உயர்நீதி மன்றம் ஆணையிட்டுள்ளது.

3. மேற்சொன்ன உயர்நீதிமன்ற ஆணையின் அடிப்படையில், பாண்டிச்சேரியில் வசிக்கும் தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தின் 5.7.2006–ம் நாளிட்ட மனு, விரிவாக அரசால் ஆய்வு செய்யப்பட்டது. மேலும், உயர்நீதி மன்ற உத்தரவின்படி, சென்னை–6, DPI வளாகத்தில் இயங்கும் தமிழ்நாடு ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கத்தோடு 3.3.2008 அன்றும், பாண்டிச்சேரியில் வசிக்கும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் சங்கத்தோடு 10.3.2008 அன்றும் அரசளவில் பேசப்பட்டது.

(த.பி.பா.)

4. பாண்டிச்சேரியில் வசிக்கும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் சங்கம், அரசிற்கு எழுதியுள்ள கடிதத்தில், சென்னை-6 DPI வளாகத்தில் இயங்கிவரும் "ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம்" அரசாணை (நிலை) எண். 10, பொது (பணிகள்-ஏ) துறை, நாள் 3.1.1964-ல் அரசால் அங்கீகாரம் செய்யப்பட்டது எனவும், மேலும் அச்சங்கம் சங்கப் பதிவாளரிடம் பதிவு செய்து, 42/1957 என்ற பதிவு எண் பெற்று இயங்கிவரும்போது, ஒவ்வொரு வருடமும் சங்க பதிவாளருக்கு விதிகளின்படி சமர்ப்பிக்கவேண்டிய சங்கத்தின் வரவு செலவு கணக்குகள் சரிவர சமர்ப்பிக்காத காரணத்தால், ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கத்தின் பதிவினை சங்கப் பதிவாளர் ரத்து செய்து 23.4.1980-ல் நாளிட்ட அரசிதழில் ஆணை வெளியிடப்பட்டதாகவும், இதற்குப்பிறகு 18.8.1991-ல் "ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம்" என்பதை "தமிழ்நாடு மாநில ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம்" என்று பெயர் மாற்றம் செய்ததாகவும், இதனால் இச்சங்கம் அரசின் அங்கீகாரத்தினை இழந்துவிட்டதாக கருதப்படவேண்டும் என்றும், மீண்டும் சங்கத்தின் பெயரில் உள்ள "மாநில" என்னும் சொல்லை நீக்கிவிட்டு "தமிழ்நாடு ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம்" என 18.6.2000-முதல் பெயர் மாற்றப்பட்டதாகவும் அரசுக்கு தெரிவித்துள்ளது.

5. சென்னை-6, DPI வளாகத்தில் இயங்கிவரும் தமிழ்நாடு ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் அரசுக்கு எழுதியுள்ள 15.9.2008 நாளிட்ட கடிதத்தில், "ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம்" என்பதை "தமிழ்நாடு ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம்" என்ற பெயர் மாற்றம் 18.6.2000 அன்று நடைபெற்ற சங்கத்தின் பொதுமகாசபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டதாகவும், ஆகவே, தங்கள் சங்கத்தின் பெயர் மாற்றம் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டதாகக் கருதி, தொடர்ந்து சங்கத்தின் புதிய பெயரான "தமிழ்நாடு ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம்" என்றே "லெட்டர்பேடு" மற்றும் அனைத்து கடிதப்போக்குவரத்து போன்றவைகளிலும் தொடர்ந்து கையாண்டுவருவதாக அரசுக்கு தெரிவித்துள்ளார்.

6. மேற்சொன்ன சூழ்நிலையில், இந்நேர்வினை அரசு சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் விரிவாக ஆய்வு செய்தது. "ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம்", கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பான முறையில் இயங்கி வருவதாலும், இச்சங்கத்தில் ஓய்வுபெற்ற மூத்த அலுவலர்கள் பலர் முக்கிய பொறுப்புகளில் இருந்து செவ்வனே பணியாற்றிக் கொண்டிருப்பதாலும், பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.10, பொது (பணிகள்-ஏ) துறை, நாள் 3.1.1964-ல் அரசு அங்கீகாரம் வழங்கப்பட்டு, சென்னை-6, DPI வளாகத்தில் செயல்பட்டு வரும் "ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம்" என்பதை "தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம்" என பெயர் மாற்றம் செய்ததை அரசு ஏற்று ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குத்சியா காந்தி
முதன்மைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து தலைமைச்செயலகத் துறைகள்.
அனைத்து துறைத்தலைவர்கள்.
செயலாளர், நிதித்துறை, சென்னை-9
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ்.வளாகம், சென்னை-6
பொதுச் செயலாளர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம், DPI வளாகம், சென்னை-6
தலைவர், பாண்டிச்சேரியில் வசிக்கும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் சங்கம் 13, எச்.ஐ.ஜி.
அவுசிங் போர்டு, ரெட்டியார்பாளையம், புதுச்சேரி-605010